## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

STC.No.453-2023 L.W.3 P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.திவ்யா | Father / Husband Name | முத்துசாமி |
| Village | தொளார்குடிகாடு | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 21 |
| | | Time | 1.00 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 25.11.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரி ஆஜரில்லை, BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**வழக்கறிஞர் ஆஜர்,**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தொளர் குடிகாடு கிராமத்தில் வசித்து வருகிறேன். அசா.1 தமிழ்செல்வி, அசா.2 விஷ்ணு இருவரையும் தெரியும். பட்டியல் சாட்சிகள் வேல்முருகன், கமலா ஆகியோரை தெரியாது. எதிரி துர்காவை தெரியும் எங்கள் பக்கத்து வீட்டு அம்மா தமிழ்செல்வி, நான், விஷ்ணு மூவரும் வைக்கோல்போரை 28–11–2023 ம் தேதி மணி தெரியவில்லை தூக்கி டிச்சியில் வைத்துக்கொண்டிருந்தோம். அப்போது பாலதண்டாயுதம் என்பவர்அந்த இடத்தில்வைக்க கூடாது என்று சொன்னார். மேற்ச்சொன்ன நாங்கள் மூவரும்அங்கு வைப்போம் என்று வைத்துக்கொண்டிருந்தோம் அப்போது பாலதண்டாயுதம் வந்து வைக்கோல் போரை டிச்சியில் தள்ளிவிட்டார். நாங்கள் மூவரும் தள்ளிவிட்ட வைக்கோல் போரை டிச்சியில் தூக்கி வைத்தோம் பாலதண்டாயுதம் மறுபடியும் வந்து தள்ளிவிட்டார் அப்போது பேசிக்கொண்டிருக்கும்போதே பாலதண்டாயுதம் அசிங்கமான வார்த்தைகளால் தேவடியா என்று தமிழ்செல்வியை பார்த்து திட்டினார் பேசிக்கொண்டிருக்கும்போதே அவர் அடிக்க வந்துவிட்டார். அப்போது தமிழ்செல்வியும் பாலதண்டாயுதமும் இருவரும் எதிர்க்கு முரடாக அடித்துக்கொண்டிருந்தார்கள் அப்போது நானும், விஷ்ணுவும் மறிக்க போனோம் அவர் தமிழ்செல்வியின் தலைமுடியை பிடீத்து இழுத்தார் விடவேமாட்டேன் என சொன்னார் நாங்கள் விடுங்கள் விடுங்கள் என்றுசொன்னோம் அவர்கெட்டிமாக பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்றார், பிறகு ஒரு அம்மா செல்வநாயகி என்பவர்தான் அங்கு வந்து தடுத்து இந்த பிரச்சனையை தீர்த்து வைத்தார். போலிஸார் என்னை

விசாரித்தனர்.

**சாட்சியை கண்ணுற்ற சாட்சி தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

**1.**கடந்த **14–08–2023** ம் தேதி பிற்பகல் **1.30** மணிக்கு சம்பவம் நடந்தது என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் **?** சரிதான்.

**2.** மேற்ச்சொன்ன சம்பவத்தின் தொடர்ச்சியில் பாலதண்டயாயுதபாணி மனைவி துர்காதான் தமிழ்செல்வி என்பவரை தேவடியா என அசிங்கமாக திட்டினார் என்றும், மயிரை பிடித்து இழுத்து வயிற்றில் உதைத்தார் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் **?** சரிதான்.

**3.** மேற்ச்சொன்ன சங்கதிகள் **1, 2** ஐ நான் அரசு தரப்பில் முதல் விசாரணையில் துர்கா என்பவரின் பெயரை சொல்லாதற்கு காரணம் நான் நீதிமன்றத்திற்குவந்து சாட்சியம்சொல்லும்போது எனக்கு பதற்றம் இருந்ததால்தான் சொல்லவில்லை என்றுசொன்னால் **?** ஆமாம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் **?** தேதி ஞாபகமில்லை, வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்து என்னுடைய வாக்குமூலத்தை என் முன்னிலையில் கையால் எழுதிக்கொண்டார்களா என்றால் **?** இல்லை, நான் பண்ணிரண்டாம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் சொல்வதுபோல்சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எனக்கு சம்பவத்தை பற்றிதெரியாது என்றாலும், அ.சா.**1** என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதராவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**STC.No.453-2023 L.W.2 P.W.2**

| Name | திரு.விஷ்ணு | Father / Husband Name | வடிவேல் |
|---|---|---|---|
| Village | தொளார்குடிகாடு | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 17 |
| | | Time | 12.40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 25.11.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரி ஆஜரில்லை, BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி 17 வயது இளஞ்சிறார் என்பதால் சாட்சி சாட்சியம்அளிக்கும் மனநிலையில் உள்ளாரா என்பதை பரிசோதிக்க கீழ்கண்ட கேள்விகள் கேட்கப்பட்டது**

கேள்வி.1 உன் பெயர் என்ன ?
பதில். விஷ்ணு என பதிலளித்தார்.
கேள்வி.2 உன் தந்தையின் பெயர் என்ன ?
பதில். வடிவேல் என பதிலளித்தார்.
கேள்வி.3 உன் தாயின் பெயர் என்ன ?
பதில் சசிகலா என பதிலளித்தார்.
கேளவி.4 இது எந்த இடம் ?
பதில் நீதிமன்றம் என பதிலளித்தார்.
கேள்வி.5 சாட்சியம் அளிக்க தயாராக உள்ளீரா ?
பதில் சாட்சியம் அளிக்க தயாராக உள்ளேன் என பதிலளித்தார்.
கேள்வி 6 உன்னை சாட்சியம் அளிக்க யாரேனும் கட்டாயப்படுத்தினார்களா ?
பதில் இல்லை.

**(Pw2 - Preliminary Question were asked to the witness and he is able answer the question and Satisfied by this Court that he is Component to be satisfied, as per Sec.118 of IEA 1872.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தொளார் குடிகாடு கிராமத்தில் வசித்து வருகிறேன். அசா.1 தமிழ்செல்வி அத்தை முறையாவார். பட்டியல் சாட்சி 3 திவ்யாவை தெரியும், பட்டியல் சாட்சிகள் 4, 5 வரையுள்ளவர்களை தெரியாது. எதிரி துக்காவை தெரியாது ( எதிரி ஆஜரில்லை). கடந்த வரூடம்தேதி, மாதம் தெரியவில்லை. சமூத்திரபுரத்தில் மதியம் 12.00 மணிக்கு என்அத்தை தமிழ்செல்வியை எதிர் தரப்பு அடித்துக்கொண்டிருந்தார்அவர் பெயர் தெரியவில்லை நான் போய்தடுத்தேன். அவங்க வைக்கோலை எடுத்துவந்து டிச் வாய்காலில்போட்டாங்க. அந்த அண்ணன் அவர் பெயர்தெரியுமா என்றால் அவர் தொளாரைசேர்ந்தவர் அவர் பெயர்தெரியவில்லை நான் ஏன் அடிச்சிங்க என்று

கேட்டபோது அவர் என்னுடைய செவுளிலும் கையால் அடித்தார் ( சாட்சி இடது புற கையை எடுத்து இடது புற செவுளில் வைத்துஅடையாளம் காட்டினார்.)அப்புறம் எனதுஅத்தையை திட்டக்குடி மருத்துவமனைக்கு அழைத்துவந்தேன். பிறகு ஆவினங்குடி காவல் நிலையத்தில் எனது அத்தை தண்டபாணி பெயரில் புகார்கொடுத்தார். போலிஸார் விசாரித்தனர்.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சியை கண்ணுற்ற சாட்சி தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

**1.**கடந்த **14–08–2023** ம் தேதி பிற்பகல் **1.30**மணிக்கு சம்பவம் நடந்தது என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் **?** சரிதான்.

**2.** மேற்ச்சொன்ன சம்பவத்தின் தொடாச்சியில் பாலதண்டயாயுதபாணி மனைவி துர்கா என்பவர்தான் தமிழ்செல்வி என்பவரை தேவடியா என அசிங்கமாக திட்டினார் என்றும், மயிரை பிடித்து இழுத்து வயிற்றில் உதைத்தார் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் **?** சரிதான்.

**3.** மேற்ச்சொன்ன சங்கதிகள் **1, 2** ஐ நான் அரசுதரப்பில் முதல் விசாரணையில் சொல்லாதற்கு காரணம் நான் குழந்தை பருவம் என்பதாலும் நீதிமன்றத்திற்குவந்து சாட்சியம்சொல்லும்போது எனக்குபதற்றம் இருந்ததால்தான் சொல்லவில்லை என்று சொன்னால் **?**ஆமாம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்து என்னுடைய வாக்குமூலத்தை என் முன்னிலையில் கையால் எழுதிக்கொண்டார்களா என்றால் **?** ஆமாம். என் முன்னிலையில்தான் படம் வரைந்து எழுதினார்கள். போலிஸார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் **? 10** வது மாதம் **2023** ம் வரூடம் மதியம்**12.00** மணிக்கு விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்திகளை தான் போலிஸாரின் விசாரணியிலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் **?** ஆமாம். நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எனக்கு சம்பவத்தை பற்றிதெரியாது என்றாலும், அ.சா.1 என்னுடையஅத்தை என்பதால் அவருக்கு ஆதராவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI